பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 233

வெள்ளிக்கிழமை
17 ஜூலை 2026

ஆடி 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

## 7 நேற்றைய அகழ்வில் என்புத் தொகுதிகள் செம்மணியில் மீட்பு!

### அவற்றில் ஒன்று சிசுவினுடையது



யாழ்ப்பாணம், ஜூலை 17
செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து ஒரு சிசுவின் என்புத் தொகுதி உட்பட 7 என்புத் தொகுதிகள் நேற்று மீட்கப்பட்டன.

11

## மகளை வன்புணர்ந்தவருக்கு 45 வருட கடூழியச் சிறை!

### வவுனியா மேல் நீதிமன்றம் அதிரடி

வவுனியா, ஜூலை 17
வவுனியா - கனகராயன் குளத்தில் 14 வயதான தனது மகளை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய நபருக்கு 45 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி

11

## எமது அரசியலுக்கான காலம் முடிந்துவிட்டது

### ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 17
எமது அரசியலுக்கான காலம் முடிந்துவிட்டது. ஆதலால் தலைமைத்துவத்தை ஏற்பதற்கு இளைய தலைமுறை முன்வர வேண்டும் - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாம் எமது காலப்பகுதியில் செய்யக்கூடிய அனைத்தையும் செய்துவிட்டோம். ஜே.ஆர். காலத்தில் எமக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது.

11

## சங்கும் வீடும் சந்திப்பு நாளை!

யாழ்ப்பாணம், ஜூலை 17
இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையிலான சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நாளை இடம்பெறவுள்ளது.
இனப்பிரச்சினைக்கான தீர்வு, புதிய அரசியலமைப்பு உருவாக்கம் மற்றும் மாகாணசபைத் தேர்தல் என்பன உள்ளடங்கலாகத் தமிழ் மக்களின்

11

### அர்ச்சுனா எம்.பி.யால் குழப்பம்

## கிளிநொச்சிக் கூட்டம் இடைநடுவில் ரத்து!

கிளிநொச்சி, ஜூலை 17
கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா ஏற்படுத்திய குழப்பங்களைத்தொடர்ந்து அந்தக் கூட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டது.
கிளிநொச்சி மாவட்ட அபி

11

## மாகாணத் தேர்தலை முடிந்தால் நடத்துக!

### பெரமுன சவால்



கொழும்பு, ஜூலை 17
முடிந்தால் மாகாணசபைத் தேர்தலை நடத்திக் காட்டுமாறு திசைகாட்டி அரசாங்கத்துக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சவால் விடுத்துள்ளது.
பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகல

11

## அதிகாரிகளின் கௌரவத்தை அனைவரும் பேணவேண்டும்!

### அமைச்சர் சந்திரசேகர் சுட்டிக்காட்டு



கிளிநொச்சி, ஜூலை 17
அரச அதிகாரிகளின் கௌரவத்தையும், கண்ணியத்தையும் சீர்குலைக்கும் வகையில் எவரும் செயற்பட முடியாது. அவர்களின் கண்ணியத்தைப் பாதுகாக்க வேண்டியது அனைவரின

11

### நீதியமைச்சருக்கு எதிரான

## நம்பிக்கையில்லாத் தீர்மானம்; இதுவரை இறுதி முடிவில்லை

### மனோ எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 17
நீதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணை தொடர்பில் இதுவரை இறுதி முடிவு எடுக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாம் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் அங்கம்

11

## ஓகஸ்ட் நடுப்பகுதிவரை டெங்கு பரவும் அபாயம்

விரிவு பக்கம்:- 05

## சிறுமி துஷ்பிரயோகம்; இளைஞருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 17
15 வயதுச் சிறுமியுடன் குடும்பமாக வாழ்ந்துவந்த இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

11



முச்சந்தி முரளி

"கூட்டத்தில் கூடி நின்று குழப்புதலையே தொழிலாகக் கொண்டவையை மாத்தேலாது கண்டியளோ"

மக்கள் [illegible] நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 16.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4492 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 33 52 70 75 |
| விசேட எழுத்து | J |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 16.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1559 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 31 34 37 38 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 16.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0518 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 6 3 0 8 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 16.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2598 |
| ஆங்கில எழுத்து | L |
| சுப்பர் இலக்கம் | 05 |
| வெற்றி இலக்கங்கள் | 08 09 51 64 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 16.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6250 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 0 6 3 3 5 1 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 16.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2280 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 11 20 24 78 |
| விசேட எழுத்து | T |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 16.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0366 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 02 16 40 |

# நீதித்துறை மீதான அழுத்தம் மக்கள் ஆணைக்கு எதிரானது!

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூலை 17**

**நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை மற்றும் நீதித்துறை ஆகியன ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான மூன்று பிரதான தூண்களாக விளங்கும் வேளையில், தற்போதைய அரசாங்கம் நீதித்துறையின் சுயாதீனத்துக்கு அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது. நீதிமன்றத்தின் சுதந்திரத்தைப் பாதித்து, நாட்டின் ஜனநாயகத்தைச் சீர்குலைக்கும் அரசின் முயற்சியை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் நீதித்துறை மிக முக்கியமான பங்காற்றி வருகின்றது. இந்த மூன்று பிரதான தூண்களுக்கு மேலதிகமாக, சுயாதீன ஊடகங்களும் மற்றும் சிவில் சமூகமும் ஜனநாயகத்தைத் தாங்கிப் பிடிக்கும் மற்றுமொரு முக்கியமான தூண்களாகத் திகழ்கின்றன.

உயர்நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பதற்கும், உயர்நீதிமன்றங்களில் நிலவும் நீதியரசர்களின் வெற்றிடங்களை நிரப்பாது விடுவதற்கும் அரசாங்கம் முற்பட்டு வருகின்றது. உயர்நீதிமன்றங்களுக்கு நியமிக்கப்பட வேண்டிய நீதியரசர்களை நியமிக்காது, அவ்வெற்றிடங்களைத் தொடர்ந்தும் வைத்திருப்பதே நீதிமன்றத்தின் மீது ஏற்படுத்தப்படும் ஒருவகை அப்பட்டமான மறைமுக அழுத்தமாகும்.

ஜனநாயகத்திலும் நீதிமன்றத்திலும் கை வைக்காது, அதன் சுயாதீனத்தில் தலையீடுகளை மேற்கொள்ளாமல், ஜனநாயகத்தை வலுப்படுத்தும் வகையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கக்கூடிய புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்.

மக்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு வழங்கிய ஆணை, நீதிமன்றத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்காக அல்ல மாறாக, ஜனநாயகத்தை வலுப்படுத்தி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காகவேயாகும். இந்த மக்கள் ஆணையை நிராகரிப்பது, மக்களின் மனித உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் மீறும் செயலாகும்- என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 16.07.2026 | வியாழக்கிழமை | 0958 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| U | 8 5 2 3 1 8 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 16.07.2026 | வியாழக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3224 | G | 26 60 68 70 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 16.07.2026 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| J | 22 30 47 78 | 5385 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 16.07.2026 | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 1054 | 06 32 49 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 16.07.2026 | வியாழக்கிழமை | |
| ரிஷபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 14 54 59 62 | 4936 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 16.07.2026 | வியாழக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| X | 07 | 06 30 55 63 | 2400 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 16.06.2026 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| T | 36 39 47 61 | 3050 |

# காக்கைதீவு மக்களுக்கு நிரந்தரத் தீர்வு வேண்டும்

## ஈ.பி.டி.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 17

காக்கைதீவு திண்மக்கழிவுப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு வழங்கப்படவேண்டும். மக்களது கோரிக்கை நியாயமானது என்று ஈ.பி.டி.பி வலியுறுத்தியுள்ளது.

காக்கைதீவுக் குப்பைமேட்டு விவகாரம் நீண்டகாலமாக தொடர் பிரச்சினையாகவுள்ளது.

எனவே யாழ்.மாநகரசபை இதுதொடர்பாக வடமாகாண ஆளுநர், மாநகரசபை நிர்வாகம் ஆகியோருடன் கலந்துரையாடி நிரந்தரத் தீர்வை வழங்க முயற்சிக்க முடியும் என்றும் கட்சியின் செயலாளர் தெரிவித்துள்ளார். (க-27)

# யோசித ராஜபக்ச வழக்கு; ஓகஸ்ட்டுக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,ஜூலை 17

பணமோசடித் தடுப்புச் சட்டத்தின்கீழ், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் புதல்வர் யோசித ராஜபக்ச மற்றும் அவரது பாட்டியான டெய்ஸி ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை, பூர்வாங்க விசாரணைக்காக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரஷ்மி சிங்கப்புலி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

முறையற்ற வகையில் ஈட்டப்பட்ட சுமார் 59 மில்லியன் ரூபா பணத்தை வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்ததன் ஊடாக, பணமோசடித் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றமிழைத்துள்ளதாகக் கூறி சட்டமா அதிபரினால் இந்த இரு பிரதிவாதிகளுக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# விவசாயிகளுக்குப் பாதிப்பின்றி கிளிநொச்சியில் நெல் கொள்வனவு

கிளிநொச்சி,ஜூலை 17


கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகளுக்குப் பாதிப்பின்றி நெல் சந்தைப்படுத்தல் சபையினர் மற்றும் தனியார் நெல் கொள்வனவை மேற்கொண்டு வருகின்றனர்.

முன்னைய காலங்களில் அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்யவேண்டுமாயின் போராட்டங்களை நடத்தியே நெல் கொள்வனவு செய்யப்படும்.

எனினும் தற்போதைய அரசாங்கம் அறுவடையை ஆரம்பித்தவுடன் நெல் கொள்வனவையும் ஆரம்பித்துள்ளது. அத்துடன் நெல்லுக்கான உத்தரவாத விலைக்கே தனியாரும் கொள்வனவு செய்து வருகின்றனர். இதனால் விவசாயிகள் எவ்வித பாதிப்புமின்றி நெல் விற்பனையில் ஈடுபட்டுள்ளனர். (க-13)

## அரச காணி மோசடி விவகாரம்;

# மேர்வின், பிரசன்ன மீது குற்றப்பத்திரிகை தாக்கல்



கொழும்பு,ஜூலை 17

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி, கிரிபத்கொட பகுதியில் அமைந்துள்ள அரசுக்குச் சொந்தமான பெறுமதிமிக்க காணியொன்றை சட்டவிரோதமாக விற்பனை செய்ய முயன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வழக்கில், முன்னாள் அமைச்சர்களான மேர்வின் சில்வா மற்றும் பிரசன்ன ரணவீர உள்ளிட்ட ஆறு பேருக்கு எதிராக கம்பஹா மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கிரிபத்கொட பகுதியில் அமைந்துள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான காணியொன்றை, போலியான பத்திரங்கள் மற்றும் ஆவணங்களைத் தயாரித்து, பிறிதொரு தரப்பினருக்கு விற்பனை செய்ய இந்தச் சந்தேகநபர்கள் குழு திட்டமிட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அரச சொத்துகளைத் துஷ்பிரயோகம் செய்தல் மற்றும் போலி ஆவணத் தயாரிப்பு ஆகிய கடுமையான குற்றச்சாட்டுகளின் கீழ் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# 35 வருடங்களாக சொந்த மண்ணில் அகதிகளாக வாழ்கின்ற அவலநிலை!

## வடமராட்சிக் கிழக்கு மக்கள் கவலை

**யாழ்ப்பாணம்,ஜூலை 17**

**யாழ்ப்பாணம், வடமராட்சிக் கிழக்கு பகுதியில் தங்களுக்குச் சொந்தமான பாரம்பரியக் காணிகள் 35 வருடங்கள் கடந்தும் இன்னும் இராணுவத்தினரால் விடுவிக்கப்படாமையால், குடியிருக்க வீடின்றித் தாம் நிர்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகக் காணி உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், கடந்த 1991ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணிப் பகுதியில் கடல் வழியாக இராணுவத்தினர் தரை இறங்கிய போது, அப்பகுதி மக்கள் தங்களின் வாழ்விடங்களை விட்டு அளவிலான இடப்பெயர்வைச் சந்திக்க நேரிட்டது. வடமராட்சிக் கிழக்கின் வெற்றிலைக்கேணி மற்றும் கட்டைக்காடு ஆகிய பகுதிகளுக்கு இடையே இராணுவத்தினர் தொடர்ச்சியாக நிலைகொண்டிருந்தனர். இதன் காரணமாக, அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பல வருடங்களாகத் தங்களின் சொந்த நிலங்களை இழந்து, வெவ்வேறு இடங்களில் இடம்பெயர்ந்துஅகதிகளாகவாழ்ந்து வருகின்றோம். 35 வருடங்கள் கடந்தநிலையிலும் தங்களுக்குச் சொந்தமான உறுதிக் காணிகள் இன்னும் இராணுவம் மற்றும் கடற்படையினரின் வசமே உள்ளது. அவை இன்றுவரை மக்களிடம் கையளிக்கப்படவில்லை- என்றனர்.

செம்பியன்பற்றுப் பகுதியில் சுமார் 25 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட மக்கள் காணியை இராணுவத்தினர் தங்களின் தேவைக்காக அண்மையில் சுவீகரிப்புச் செய்ய முற்பட்டனர். எனினும், அதற்கெதிராக அப்பகுதி மக்கள் ஒன்றுதிரண்டு பலத்த எதிர்ப்பை வெளியிட்டதை அடுத்து சுவீகரிப்பு முயற்சி தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-80)



## வனவிலங்குப் பாகங்கள் பெரும் தொகுதி மீட்பு!

கொழும்பு, ஜூலை 17

சட்டவிரோதமான முறையில் வனவிலங்குப் பாகங்களையும், அவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பெறுமதிமிக்க ஆபரணங்களையும் தம்வசம்வைத்திருந்த மூன்று சந்தேகநபர்கள் பொரளை மற்றும் பாணந்துறை ஆகிய பகுதிகளில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து யானைத்தந்தத்தினால் செய்யப்பட்ட 8 கிண்ணங்கள், யானை முத்து கொண்டு செய்யப்பட்ட ஒரு மாலை, ஒரு வளையல் மற்றும் ஒரு பெட்டி, 2 அடி நீளமுள்ள யானைத்தந்தம், 5 சிறுத்தைப்பற்கள் மற்றும் 2 சிறுத்தைத்தோல்கள், கடல் சிப்பிகள், மான்கொம்பு, கருப்புப் பவளப் பாறைத் துண்டுகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-இ)

## உ/த பரீட்சையை ஒத்திவைக்கும் மனுவை ஏற்பதா? 23 இல் தீர்ப்பு

கொழும்பு, ஜூலை 17

எதிர்வரும் நாள்களில் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை ஒத்திவைத்து உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு ஏற்பதா? இல்லையா? என்பது குறித்த உத்தரவு இந்த மாதம் 23ஆம் திகதி அறிவிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (ச–இ)

## சிறைமோதலில் துப்பாக்கிச்சூடு; சிறை அதிகாரிக்கு இடமாற்றம்!

கொழும்பு, ஜூலை 17

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலைக் கட்டுப்படுத்த துப்பாக்கிச்சூடு நடத்திய சிறை அதிகாரி, விசாரணைகள் முடியும் வரை பல்லேகல சிறைச்சாலைக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். கடந்த ஜூலை 6ஆம் திகதி, கைதிகள் குழுவொன்று சிறைச்சாலையின் இறுதி மரக் கதவை உடைத்துக் கொண்டு தப்பியோட முயன்றபோது இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இந்தத் துப்பாக்கிச்சூடு சிறைச்சாலை விதிகளுக்கு உட்பட்டு நடத்தப்பட்டதா அல்லது அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டதா என்பதைக் கண்டறிய சிறப்பு விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. (ச-44)

## கிளாலி கச்சார்வெளியில் கொத்தணி வீட்டுத்திட்டம்

கிளிநொச்சி, ஜூலை 17

கிளிநொச்சி மாவட்டம், பளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிளாலி - கச்சார்வெளி கிராம அலுவலர் பிரிவில் தற்காலிகக் குடியிருப்புகளில் வாழ்ந்து வந்த மேலும் 24 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்குவகையில் நிரந்தரக் கொத்தணி வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முறையான வழிகாட்டலின் கீழ் இந்திய அரசாங்கத்தின் விசேட நிதி ஒதுக்கீட்டின்கீழ் இந்த வீடமைப்புத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இதன்படி, தேர்வுசெய்யப்பட்ட ஒவ்வொரு பயனாளி குடும்பத்திற்கும் தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. (ச-80)

## நுள்ளுப்பிறாண்டி கிள்ளுப்பிறாண்டி!

குட்டிநாய்க்கும் குழந்தைப்பிள்ளைக்கும் செல்லம் குடுத்தால் பிறகு கஷ்டப்படவேண்டியிருக்கும் எண்டு பழைய ஆக்கள் சொன்னது இப்பவும் பலிச்சுக்கொண்டுதான் இருக்குது. உந்தத் திசைகாட்டி அரசாங்கம் எங்கட தமிழ்த் தேசியத்தைக் குழப்பிறதுக்கும், தான் செய்யிற பிழையளை மறைக்கிறதுக்கும் ஊசிக்கார எம்.பி.யைத்தான் பகடையாப் பாவிச்சுக்கொண்டு வந்தது. உந்த அபிவிருத்திக்குழுக் கூட்டங்களில அரசாங்கத்துக்கு வில்லங்கமான காணி விடுவிப்பு, திஸ்ஸ விகாரை மாதிரி விசயங்களை ஆரும் கதைச்சால் அதுக்கு திசைகாட்டிக்காரரால பதில் சொல்லேலாது. ஏனெண்டால் அதெல்லாம் அவையின்ர கையில இல்லை, எல்லாம் ஆமியின்ர கையிலையும், பிக்குகளின்ர கையிலையும் தான் இருக்குது. அதால தங்கட ஏலாவாளித்தனத்தைக் காட்டாமல் இருக்கிறதுக்காக அவை இந்த ஊசிக்கார எம்.பி.யை அந்த நேரங்களில அவிட்டு விடுவினம். அந்த எம்.பி.யும் ஏன்,எதுக்கு எண்டில்லாமல் 'தூக்கி அடிப்பன்ரா நாயே' எண்ட மாதிரியான சண்டித்தனத்தோட அந்தக் கூட்டங்களை 'இனிதே' இடைநடுவில முடிச்சு வைப்பார். இப்பிடி அவர் தங்களுக்குச் செய்யிற உதவியளாலதான் 'அந்தர' அமைச்சர் அவரோட நுள்ளுப்பிறாண்டி கிள்ளுப்பிறாண்டி எல்லாம் விளையாடுறவர்.

இப்பிடி நுள்ளுப்பிறாண்டி விளையாடியான ஆள், இப்ப அவைக்கே ஆப்பா மாறிட்டார். கொஞ்ச நாளைக்கு முன்னம் குரக்கன் சால்வைக்காரக் கூட்டத்தோட ஊசிக்காரர் ஐக்கியமாகிட்டார். அந்தக் கட்சிக்கும், அதின்ர தலைமையா இருக்கிற குடும்பத்துக்கும் தான் நாய் மாதிரி விசுவாசமா இருப்பன் எண்டு கண்ணீரும் வடிச்சார். இந்த ஊசிக்காரரின்ர ஸ்பெசலே இந்தக் கண்ணீர் தான். ஆளுக்குச் சொல்ல முன்னம் கிளீசரின் பாவிக்காமலே கண்ணில குபுக்கெண்டு கண்ணீர் வந்திடும். இப்பிடி ஊசிக்காரர் தங்கட பக்கத்தில இருந்து குரக்கன்சால்வைப் பக்கமா திசைமாறிப் போறதைக் கண்டதும் திசைகாட்டிக்காரருக்கு என்ன செய்யிறதெண்டு தெரியாமல் போட்டுது. அந்தக் கடுப்பில அவை இருக்கேக்க, நேற்றையான் கிளிநொச்சிக் கூட்டத்தில வழக்கம் போல ஊசிக்காரர் தன்ர குறளிவித்தையளைக் காட்டத் தொடங்கிட்டார். நாய் எந்தக் கறண்ட் போஸ்டைக் கண்டாலும் காலைத் தூக்கிறமாதிரி, இந்த ஊசிக்காரரும் எந்த அதிகாரியைப் பார்த்தாலும் 'நீ ஊழல்வாதி' எண்டு சொல்லாமல் இருக்கமாட்டார். இப்பிடி அவைக்கு ஊழல்வாதி எண்டு பட்டம் குடுத்தால் தான் பேசுற எல்லாத்துக்கும் சனம் சப்போர்ட் பண்ணுறதோட, அந்த அதிகாரியும் பம்மிக்கொண்டிருப்பார் எண்டது ஊசிக்காரரின்ர நினைப்பு.

ஆனால் தெரியாத்தனமா அவர் இந்தமுறை கிளிநொச்சிக்கூட்டத்திலையும் ஜீ.ஏ.யைப் பார்த்து 'நீரும் ஊழல்வாதி. அதுக்கு இந்த பைலில ஆதாரம் இருக்கு' எண்டு பழக்கதோசத்தில பாயத் தொடங்கியிருக்கிறார். ஆனால் இந்த முறை ஊசிக்காரர் வாய் வைச்ச அதிகாரி 'நானொண்டும் ஊழல்வாதியில்லை. ஆதாரமிருந்தால் இப்ப இந்தச் சபையில காட்டுங்கோ, நீங்கள் சொல்ற எல்லாத்தையும் நான் ஏற்கோணுமெண்டில்லை' என்று மறுத்தான் அடிக்க, ஊசிக்காரருக்கு மலாரடிச்சமாதிரிப் போட்டுது. எண்டாலும் விடாமல் ஊசிக்காரர் குலைச்சுக்கொண்டே இருக்க, ஒரு கட்டத்தில தாங்கள் இவ்வளவு நாளும் நுள்ளி வளர்த்த கிளி தானே எண்டு அந்தர அமைச்சர் அடக்கப் போக, அவர் கிளி எண்டு நினைச்ச ஊசிக்காரர் கிடாய் மாதிரி குத்தவர அமைச்சர் ஓடி வந்து கதிரையில இருந்திட்டார். அதுக்குப் பிறகு கூட்டத்துக்கு வந்த சனங்கள், பொது அமைப்புகளின்ர பிரதிநிதியள் எண்டு எல்லாரும் ஊசிக்காரரில பாயத்தொடங்கிட்டினம். இனியும் இந்தச் சீலம்பாய்க் கூட்டத்தில இருந்தால் மரியாதை இல்லை எண்டு மற்ற எம்.பி.மாரும், அதிகாரிமாரும் வெளிய போட்டினம். கடைசியா அமைச்சரும், ஊசிக்காரரும் மட்டும் நிண்டு கூட்டத்தை நடத்தேலாது தானே. அதால நேற்றையான் கூட்டம் தொடங்கி ஒரு மணித்தியாலத்திலேயே இடையில நிப்பாட்டுப்பட்டுப் போட்டுது. இப்பிடியே கூட்டங்களைக் குழப்பினால் எங்கட மாவட்டங்களின்ர அபிவிருத்தி அம்போதான் கண்டியளோ!

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# கதிர்காமக் கந்தனில் ஆடிவேல் விழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

வரலாற்றுப் புகழ்மிக்க கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா நேற்றுமுன் தினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. கொடிக்கு விசேட பூஜை வழிபாடுகள் ஆற்றப்பட்டுத் தொடர்ந்து கொடிச்சீலை ஆலய வளாகத்திலுள்ள பால்குடிபாவா பள்ளிவாசலைச் சுற்றி ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. இந்து, பௌத்த, இஸ்லாம், கிறிஸ்தவ சமயத் தலைவர்களின் ஆசி உரைகளைத் தொடர்ந்து பக்தர்களின் அரோகராக் கோச முழக்கங்களுக்கு மத்தியில் புனிதக் கொடி ஏற்றிவைக்கப்பட்டது. இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருகைதந்த திரளான பக்தர்கள் கொடியேற்றத் திருவிழாவில் கலந்துகொண்டனர். இதேவேளை, தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா இடம்பெறும். எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை மாணிக்க கங்கையில் இடம்பெறும் தீர்த்தோற்சவத்துடன் ஆடிவேல் விழா நிறைவுபெறும். (ச-66)



## ஆடிக்கூழ் நிகழ்வு


யாழ்ப்பாணம், ஜூலை 17

ஆடிப்பிறப்பை முன்னிட்டுத் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆடிக்கூழ் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணி முதல் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் பேருந்து நிலையத்தடியில் நடைபெறவுள்ளது. (ச-41-66)

## ஆடிப்பிறப்புக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

ஆடிப்பிறப்புக் கொண்டாட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு, யாழ். நகர மத்திய நிலையத்திலுள்ள நவாலியூர் சோமசுந்தரப்புலவர் திருவுருவச்சிலையடியில் இடம்பெறவுள்ளது. (க)



## கண்ணகி அம்மன் ஆலய புனரமைப்புக்கு அடிக்கல்

முல்லைத்தீவு, ஜூலை 17

முல்லைத்தீவு கள்ளப்பாடு தெற்கு, தீர்த்தக்கரை, கண்ணகி அம்மன் ஆலயப் புனரமைப்புக்கு நேற்றுமுன்தினம் அடிக்கல் நாட்டப்பட்டது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் மகாதேவா குணசிங்கராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (க-246)





## செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காமத்துக்கு ஆடிவேல்

வரலாற்றுப் புகழ்மிக்க கதிர்காமக்கந்தன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழாவுக்காக வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமக் கந்தன் ஆலயத்துக்கு வேல் அனுப்பும் நீண்டகாலப் பாரம்பரியம் மிக்க பயணப் பூசை நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு நடைபெற்றது. பெருமளவான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் பூசைவழிபாடுகள் பக்திபூர்வமாக இடம்பெற்றன. (ச-66)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திடீர் செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சி தரும் செய்தி வந்துசேரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** இன்று பலவகைகளிலும் அனுகூலமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் சாதகமாகமுடியும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளதால் அவர்களுடன் பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகும். புதிய முயற்சி எடுப்பதற்கு சாதகமான நாள். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. நண்பர்களிடமிருந்து எதிர்பார்த்த தகவல் கிடைக்கும்.

**சிம்மம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். கையிருப்புக் கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். கணவன்–மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். சகோதரர்களால் ஆதாயம் உண்டு.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவுகளை பிற்பகலுக்குமேல் மேற்கொள்வது சாதகமாக முடியும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு உறவினர்கள் ஒத்துழைப்புத்தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** எதிர்பாராத சங்கடங்கள் ஏற்படக்கூடும் ஏற்படும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலையே காணப்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**மகரம்:** புதிய முயற்சி எதுவும் இன்றைக்கு வேண்டாம். செலவுகளைச் சமாளிக்க கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் சிலருக்கு ஏற்படும்.

**கும்பம்:** பிற்பகலுக்குமேல் காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு நண்பர்கள் மூலம் பணவரவு கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பிள்ளைகள்வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். அவர்களின் உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# கிடைக்குமா தீர்வு?

காக்கைதீவில் 'கழிவு மீள்சுழற்சி மையம்' என்ற கவர்ச்சிகரமான பெயரில், ஆரம்பத்தில் உரம் தயாரிக்கும் உன்னத நோக்கோடு தொடங்கப்பட்ட ஒரு திட்டம், இன்று அந்தச் சூழலில் வசிக்கும் மக்களின் வாழ்வை நரகமாக்கும் சாபக்கேடாக மாறியுள்ள விவகாரம், யாழ்ப்பாணம் மாநகரசபையின் நிர்வாகத் திறமையின்மையை அப்பட்டமாகத் தோலுரித்துக் காட்டியுள்ளது. தங்களின் குடிமனைப் பகுதிகளுக்கு நடுவே அமைந்துள்ள இந்த மையத்தை உடனடியாக அகற்றக் கோரி, யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்பாக காக்கைதீவு மக்கள் நடத்தியுள்ள போராட்டம், அவர்களின் வாழ்வுரிமைக்கான குரலாகவே ஒலிக்கின்றது. கழிவுகளைத் தரம் பிரித்துச் சுழற்சி செய்யப் போகிறோம் என்று கூறிவிட்டு, இன்று எவ்வித வடிகட்டலுமின்றி மலசலகூடக் கழிவுகளையும் உணவகக் கழிவுநீரையும் பொதுவாய்க்கால்களில் திறந்துவிடுவது, மக்களின் அடிப்படை உயிர்வாழும் உரிமை மீதான அப்பட்டமான ஆக்கிரமிப்பாகும்.

காக்கைதீவு மக்கள் இன்று அனுபவித்துவரும் துயரங்கள் எந்தவொரு மனிதநேயமுள்ள சமூகத்தையும் உலுக்கக்கூடியவை. குடியிருப்புப் பகுதிகளில் உள்ள கிணற்றுநீர் மாசடைந்து, துர்நாற்றம் வீசுவதால் குடிக்கக் கொஞ்சம் தூய நீரின்றி மக்கள் தவிக்கின்றனர். ஒரு தட்டு உணவை நிம்மதியாக உண்ணமுடியாத அளவுக்குப் பெருகியுள்ள இலையான் தொல்லையும், டெங்குப் பரவல் அச்சுறுத்தலுக்கு மத்தியில் வாய்க்கால்களில் தேங்கிநிற்கும் கழிவுநீரால் பெருகும் நுளம்புகளும் அந்தப் பிரதேசத்தையே ஒரு தொற்றுநோய் அபாயவலயமாக மாற்றியுள்ளன. அண்மையில் இந்தக் கழிவுமையம் திடீரெனத் தீப்பற்றி எரிந்தபோது எழுந்த நச்சுப்புகையினால், முதியவர்களும், ஆஸ்துமா நோயாளிகளும், 25-க்கும் மேற்பட்ட பச்சிளம் குழந்தைகளும் தங்களின் வீடுகளை விட்டு இரவோடு இரவாக இடம்பெயர வேண்டியிருந்த கொடுமை, மாநகரசபையின் நிர்வாக அலட்சியப் போக்கின் உச்சகட்ட சான்றாகும்.

இந்த மக்கள் எதிர்நோக்கும் மாபெரும் சுகாதாரப் பேரழிவுக்குத் தற்காலிகத் தீர்வுகள் எவ்விதத்திலும் பலனளிக்காது; காத்திரமான மற்றும் நிரந்தரமான திட்டமிடல்களே இப்போதைய அவசரத் தேவையாகும். முதலாவதாக, குடியிருப்புப் பகுதிகளுக்கு மிக அண்மையாகவுள்ள இந்தக் கழிவு மையத்தை, மனித நடமாட்டமில்லாத அல்லது மாற்றுப் பொருத்தமானதொரு தூரப்பகுதிக்கு உடனடியாக இடமாற்றம் செய்ய மாநகரசபை நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுவரை, அங்கே தேங்கிக் கிடக்கும் குப்பைகளைத் தரம் பிரித்து, நச்சுப்புகையோ அல்லது கழிவுநீரோ வெளியேறாத வண்ணம் நவீன விஞ்ஞானபூர்வமான உத்திகளைப் பயன்படுத்திப் பராமரிக்க வேண்டும். தனியார் உணவகங்கள் மற்றும் விடுதிகளின் கழிவுநீரை எவ்விதச் சுத்திகரிப்புமின்றி நேரடியாக வெளியேற்றும் தரப்பினருக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகளும் அபராதங்களும் விதிக்கப்பட வேண்டும்.

பொதுமக்களின் வீடுகளில் சிறு சிரட்டையில் தண்ணீர் நின்றால் கூடத் தண்டம் விதிக்கும் சுகாதாரத் துறையினர், தங்கள் மூக்குக்கு நேரே மாநகர சபையினால் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள இந்தப் பாரதூரமான சுகாதாரச் சீர்கேடு தொடர்பில் பாராமுகமாக இருப்பது வேடிக்கையானதே. தூய்மையான சுற்றுப்புறமும் மாசற்ற குடிநீரும் ஒவ்வொரு குடிமகனினதும் அடிப்படை உரிமைகளாகும். எனவே, யாழ்ப்பாண மாநகரசபையும் தற்போதைய அரசாங்கமும் இந்த விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு, காக்கைதீவு மக்களின் நியாயமான கோரிக்கைக்குச் செவிசாய்க்க வேண்டும். மக்களின் ஆரோக்கியத்தைப் பணயம் வைத்து நடத்தப்படும் எந்தவொரு திட்டமும் அபிவிருத்தியாகாது, அது பேரழிவே என்பதை உணர்ந்து இந்தக் கழிவு மையப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

அஃகி அகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்

பொருள்: யாரிடத்திலும் பொருளைக் கவர விரும்பிப் பொருந்தாதவற்றைச் செய்தால், நுட்பமானதாய் விரிவுடையதாய் வளர்ந்த அறிவால் பயன் என்ன?



# ஓகஸ்ட் நடுப்பகுதிவரை டெங்கு பரவும் அபாயம்



கொழும்பு, ஜூலை 17

எதிர்வரும் ஓகஸ்ட் மாத நடுப்பகுதி வரை டெங்கு நோய் பரவுவதற்கான அதிக அபாயகரமான சூழ்நிலை நிலவக்கூடும் என சுகாதார அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது கம்பஹா மாவட்டத்தில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாடு பூராகவும் நிலவும் டெங்கு அபாயத்தைக் கருத்திற்கொண்டு, 11 மாவட்டங்களை இலக்குவைத்து விசேட டெங்கு ஒழிப்புத் திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

டெங்குப் பரவல் அதிகமாகப் பதிவாகும் வலயங்களை இனங்கண்டு, நுளம்புகள் பெருகும் இடங்களை அழிப்பது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றது. எனவே, நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதாரத் துறையினர் முன்னெடுக்கும் ஒழிப்புத் திட்டங்களுக்கு அதிகபட்ச ஆதரவை வழங்கவேண்டும். தாங்கள் வசிக்கும் வீடுகள், பாடசாலைகள் மற்றும் பணியிடங்களைச் சுற்றியுள்ள வளாகங்களை நுளம்புகள் பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதை உறுதிசெய்ய வேண்டும் - என்றார். (ச-இ)

## கொலை வழக்கில் இருவருக்கு மரணதண்டனை

கொழும்பு,ஜூலை 17

எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், கடந்த 2011ஆம் ஆண்டில் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய இருவருக்கு பலபிட்டிய மேல்நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

சுமார் 15 வருடங்களாக நீடித்த இந்த வழக்கு விசாரணையின் தீர்ப்பை நீதிபதி நேற்றுமுன்தினம் அறிவித்தார். இவர்களுக்கு எதிராக தண்டனைச் சட்டக்கோவையின் 296ஆவது பிரிவின் கீழ் இவ்வாறு மரணதண்டனை விதிக்கப்பட்டது. (ச-இ)

## 2 கிலோ ஐஸ்டன் இருவர் சிக்கினர்

கொழும்பு,ஜூலை 17

2 கிலோகிராம் மற்றும் 554 மில்லிகிராம் 'ஐஸ்' போதைப்பொருளை வாகனத்தில் கடத்திச் செல்ல முயற்சித்த 2 சந்தேகநபர்களை தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் உள்ள அபரெக்க கட்டுப்பாட்டு நிலைய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் அந்த இடத்தில் இருந்து கொழும்பு நோக்கி அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்க முயன்றபோதே சிக்கினர்.

சந்தேகநபர்கள் 28 மற்றும் 32 வயதுடைய பொரெல்லா பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது. (ச-இ)

## பதவி விலகினார் நீர்கொழும்பு மேயர்

கொழும்பு,ஜூலை 17

நீர்கொழும்பு மாநகர மேயர் சட்டத்தரணி றொபர்ட் ஹின்கெந்த நேற்றுமுன்தினம் புதன்கிழமை தனது மேயர் பதவியை இராஜினாமா செய்துள்ளார். தனது பதவிவிலகல் ஒரு தனிப்பட்ட தீர்மானம் என்று அவர் ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார். (ச-இ)




# பிரதேச செயலக அலுவலர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

அம்பாறை, ஜூலை 17

அம்பாறை மருதமுனையில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அலுவலர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கதிர்காமம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த அலுவலர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். விபத்துச் சம்பவம் தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச-இ)

சனிக்கிழமை-ஆனி 22
18.07.2026

சுபநேரம் : 04.26 - 05.56
ராகுகாலம் : 11.56 - 01.26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிப்பிறப்பும் தமிழர்களும்

மதுரகவி. காரை.எம்.பி.அருளானந்தன்



பன்னிரு மாதங்களில் ஆடி மாதத்துக்கென்று கூடுதலான சிறப்புகளும் பெருமைகளும் உள்ளன. தட்சிணாயன காலத்தின் தொடக்கமே ஆடிப் பிறப்பு உத்தராயன புண்ணிய காலம் நீங்கப் பெற்று தட்சிணாயன புண்ணிய காலம் ஆரம்பமாகிறது. இந்தக் கால மாற்றத்தைக் கவனிக்கின்ற பொழுது தேவர்களைப் பொறுத்தவரை கடந்து செல்கின்ற ஒரு வருட காலம் (365 நாள்கள்) என்பது ஒரு நாளாக கணிக்கப்படுகின்றது. இதன்படி உத்தராயணம், தட்சிணாயனம் என இரு பிரிவுகளாக அமைகின்றது. இந்துக்கள் உத்தராயண கால ஆரம்பத்தை தைத்திருநாளாகவும் தட்சிணாயன கால ஆரம்பத்தை ஆடிப்பிறப்பாகவும் கடைப்பிடித்துவருகின்றார்கள். பகலில் ஒளிபெருகி இருள் குறையவும் இரவில் ஒளி குன்றி இருள் பெருகவும் அமைகின்ற கால நகர்வையே இரு வெளிப்பாடுகளாக்கி உத்தாரயனம் பகல் என்றும் தட்சிணாயனம் இரவு என்றும் குறிப்பிடப்படுகிறது.

## ஆடிப்பிறப்பும் நவாலியூர் சோமசுந்தரப் புலவரும்

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஆடிப்பிறப்பின் மகத்துவம் பற்றி தனது பாக்களில் மொழிகின்ற அற்புதம் ஒரு தனிச் சிறப்பாகும்.

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!
கூடிப் பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

பாசிப்பயறு வறுத்து குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி
வாசப் பருப்பை அவித்துக் கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து

வேண்டி தேங்காய் உடைத்து துருவியே
வேலூர் சக்கரையும் கலந்து
தோண்டியில் நீர்விட்டு மாவை அதில் கொட்டி
சுற்றிக் குழைத்துத் திரட்டிக் கொண்டு

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளி
வெல்லக் கலவையை உள்ளே இட்டு
பல்லுக் கொழுங்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுருண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழா
மணக்க மணக்க வாயூறிடுமே

குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொழுத்தி வைத்து
இளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே!

வண்ணப் பலாவிலை ஓடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலக கொண்டு
அன்னை அகப்பையால்
அள்ளி அள்ளி வார்க்கின்ற
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே


வாழைப்பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச் சுடச் ஊதிக் குடித்துச்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

என தங்கத்தாத்தா ஆடிப்பிறப்பின் வருகையை அத் திருநாள் மகத்துவத்தைச் சேர்த்து வைத்து சேதி சொல்கின்றார்.

ஆடி மாதம் முழுவதும் வழிபாட்டுக்குரிய மாதமாக அமைகிறது. இந்த மாதத்தில் தான் ஆடிப்பிறப்பு, ஆடி அமாவாசை விரதம், ஆடிப்பூரம், ஆடிச் செவ்வாய் என்பன வரிசையாக வந்துவிடும். தட்சிணாயணம் இந்த மாதத்திலிருந்து ஆரம்பமாகின்றது. ஆடிப் பிறப்பு தான் அதனுடைய ஆரம்பம். ஆடிப்பிறப்பைத் தொடர்ந்து இந்த மாதத்திலேயே தான் இந்துக்கள் தமது மூதாதையர்க்ளுக்கு நிறைவேற்றிவருகின்ற பிதிர்க்கடனை விதந்துரைக்கும் ஆடி அமாவாசை வரும் அவ் ஆடி அமாவாசையைத் தொடர்ந்து அம்பாள் வழிபாட்டுக்குரிய ஆடிப்பூரம், ஆடிச்செவ்வாய், ஆடி வெள்ளி, முருகனுக்குரிய ஆடிக்கிருத்திகை போன்ற விரத வழி பாட்டுத் தினங்கள் இந்த ஆடி மாதத்திலேயே பெருகி வருவதைக் காணலாம். இத்தகு பண்டிகைகளை புராதன காலம் முதலாக சைவத்தமிழ் மக்கள் பேணிக் கொண்டாடி வருகிறார்கள். நாமும் எமது அடுத்த சந்ததிக்கு இவற்றை சரியான நெறியில் கையளிக்க வேண்டும். எனவே எல்லோரும் கூடுவோம் ஆடிப்பிறப்பைக் கொண்டாடி மகிழ்வோம் வாரீர்.

# ஆனந்தத்தை அள்ளித்தந்திடும் ஆடிப்பிறப்பு

கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்





மகிழ்ச்சியையும் மங்களத்தையும் மகோன்னதத்தையும் மக்களின் மனதிலே அளவிலாத ஆனந்தத்தையும் அள்ளித்தருகின்ற ஆடிப்பிறப்பு நன்னாள் இன்றாகும். ஆடி மாதம் பிறந்து விட்டால் கூடவே விரதங்களும் விழாக்களும் ஆரம்பமாகிவிடும்.

இன்றைய ஆடிப்பிறப்பானது தமிழ் மக்களுக்கு ஒரு நல்ல விடியலையும் மட்டற்ற மகிழ்ச்சியையும் கொடுக்கின்ற புனித புண்ணியம் நிறைந்த மங்களகரமான விடயமாகும்.

இந்த ஆடியிலே தான் ஆடிச் செவ்வாய், ஆடி அமாவாசை, ஆடிப்பெருக்கு, ஆடிப்பூரம் என்று இன்னோரன்ன பல விரதங்களும் விழாக்களும் அடுக்கடுக்காக வரும். சைவ சமயத்தவர்கள் இந்த ஆடிப் பிறப்பை மனதார வரவேற்று உள்ளத்திலே மகிழ்ச்சி பொங்க ஆடிக்கூழ் காய்ச்சிக் கூடியிருந்து குடிப்பது வழக்கமாகும். சிலர் நல்ல இனிப்பான தின்பண்டங்களை மகிழ்ச்சியுடனே செய்து, உறவுகளுக்கும் கொடுத்து, நண்பர்களுடன் கும்மாளம் அடித்துச் சந்தோஷம் கொண்டாடுவதை நாம் காணக்கூடியதாக இருக்கும்.

இப்படி ஆடி மாதத்தின் சிறப்பை நம் முன்னோர்கள் பலரும் அறிந்ததன் காரணமாக விரதம் காத்து விழாக்களையும் கொண்டாடிமகிழ்வர்.

ஆனந்தத்தை அள்ளித்தந்திடும் இன்றைய ஆடிப்பிறப்பை ஈழநாட்டில் மட்டும் அல்ல, இந்தியாவிலும் குதூகலமாகக் கொண்டாடி மகிழும் நிலையில் தமிழ் பேசும் பண்டைத் தமிழர்கள் ஆடிப்பிறப்பின் மகிமையை உணர்ந்து ஆலயத்தின் இறைவழிபாட்டுடன் ஆரம்பித்து. ஆடிக்கூழ் பரிமாறி, புத்தாடையணிந்து உற்றார் உறவினர்களுடன் கூடியிருந்து சொந்தம் கொண்டாடி கோலாகலமாக அனைவரையும் நேசித்து மகிழ்வர்.

ஆகவே இன்றைய ஆடிப்பிறப்பை ஆனந்தமாக வரவேற்று, மன மகிழ்ச்சியுடன் சந்தோஷம் கொண்டாடி, உள்ளத்தில் உவகை பொங்க எல்லோரும் சுகமோய் வாழவேண்டும் என்ற பரந்த நோக்குடன் வாழத்தலைப்படுவோமாக. இறைவனின் ஆசி பரிபூரணமாகக் கிடைக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 'எல்-நினோ'வறட்சியை எதிர்கொள்ள நீரைச் சிக்கனமாகப் பாதுகாப்போம்

## வடக்கு விவசாய அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

மன்னார், ஜூலை 17

**எதிர்காலத்தில் தீவிரமடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ள 'எல்-நினோ' காலநிலைத் தாக்கத்திலிருந்து எமது வாழ்வாதாரத்தையும், பயிர்ச்செய்கை மற்றும் கால்நடைகளையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமாயின், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்திப் பாதுகாப்பது தற்போதைய கட்டாயத் தேவையாகும் என வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ச.சிவசிறீ தெரிவித்துள்ளார். மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற விவசாயக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த எல்-நினோ காலநிலைத் தாக்கம் நடப்பு 2026ஆம் ஆண்டு முதல் 2027ஆம் ஆண்டு வரை தொடரும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

உணவு உற்பத்திக்கு நீரின் தேவை மிக முக்கியமானது என்பதால், விவசாயிகள் கிடைக்கக்கூடிய நீரை அத்தியாவசியத் தேவைகளுக்கு மாத்திரம் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் வரவிருக்கும் பெரும்போகப் பயிர்ச்செய்கையைச் சரியான முறையில் திட்டமிட்டு, அதிலிருந்து உச்சகட்ட விளைச்சலையும் நன்மையையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கிடைக்கப் பெறுகின்ற மழைநீரை வீணாக்காமல், அதன் உச்சகட்ட அளவைச் சேகரித்து வைக்கும் பொருட்டு மாகாணத்தில் உள்ள குளங்களை அவசரமாகப் புனரமைப்பதற்கான விசேட திட்டங்களைச் செயற்படுத்துதல் வேண்டும்.

காலநிலைச் சவால்களுக்கு முகங்கொடுத்து, அதற்கு ஏற்ற பயிர்ச்செய்கைத் திட்டமிடல்களை மேற்கொள்வதன் மூலமே பொருளாதார ரீதியாக நாம் தப்பித்துக்கொள்ள முடியும் - என்றார். (ச-60)



# பனைநின்றான் கிராமத்தில் புதிய பாலத்துக்கு அடிக்கல்

வவுனியா,ஜூலை 17

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பனைநின்றான் கிராமத்துக்குச் செல்லும் வீதியில் அமைந்துள்ள பாலத்தை, புதிதாக நிர்மாணிப்பதற்கு நேற்றுமுன்தினம் அடிக்கல் நாட்டப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் கோரிக்கைக்கு அமைவாக இந்தப் பாலம் புதிதாக அமைக்கப்படவுள்ளது.

அடிக்கல் நாட்டும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான து. ரவிகரன், செ.திலகநாதன் மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேசசபை உறுப்பினர்கள், வவுனியா வடக்கு பிரதேசசபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-246)

# பாரதி வித்தியாலயத்தில் புதிய வகுப்பறை திறப்பு

கிளிநொச்சி,ஜூலை 17

கிளிநொச்சி பாரதிபுரம் பாரதி வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதி நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது. மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் தொகுதியை, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் திறந்து வைத்தார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயசந்திர மூர்த்தி ரஜீவன் மற்றும் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-55,113)






# வவு. போகஸ்வெவ வீதியில் 8 கிலோமீற்றருக்கு காப்பெற்

வவுனியா, ஜூலை 17

வவுனியா போகஸ்வெவ வீதியின் வெளிக்குளம் சந்தியிலிருந்து மாமடுவ வரையான 8 கிலோமீற்றர் தூரத்துக்குக் காப்பெற் இடும் பணிகள், கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டன. 48 கிலோமீற்றர் நீளமான இந்த வீதி போர்க்காலத்தில் கடுமையாகச் சேதமடைந்துள்ளது.

முதற்கட்டமாக 8 கிலோமீற்றர் தூரத்துக்குக் காப்பெற் இடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக 529 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டத்தில் மாமடுவவிலிருந்து ரம்பவெட்டிய வரையான வீதியும், மூன்றாம் கட்டத்தில் போகஸ்வெவ வரையான வீதியும் அபிவிருத்தி செய்யப்படும். ஆரம்ப நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஜெகதீஸ்வரன் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், உள்ளூராட்சிப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க- 110)

# விளாத்திக்குளம் பாடசாலைக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர்

மன்னார், ஜூலை 17

மடுக் கல்வி வலயத்துக்குட்பட்ட விளாத்திக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி, மனோன்மணி அறக்கட்டளையின் நிதி அனுசரணையில் முன்னெடுக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகம் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. மனோன்மணி அறக்கட்டளையின் தலைவர் அகஸ்ரின் சவேரியானின் வழிநடத்தலில், பாடசாலையின் அதிபர் எம்.குணசேகரன் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில், பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம். ஜெயரூபன், மனோன்மணி அறக்கட்டளையின் பொருளாளர் ஜி.அன்ரனி மற்றும் நிர்வாக உறுப்பினர்கள், பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-56)





# டெங்கு நுளம்பு பெருகும் சூழல்; 3 அரச நிறுவனங்களுக்கு வழக்கு

மன்னார்,ஜூலை 17


விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் போது, நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த குற்றச்சாட்டில், 3 அரச நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மன்னார் நகரசபையின் ஏற்பாட்டில், பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரிப் பணிமனையினர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் முப்படையினர் இணைந்து மன்னாரில் நேற்றுமுன்தினம் விசேட சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது அரச அலுவலகங்கள், விடுதிகள், வர்த்தக நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதனையடுத்து டெங்கு நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருந்ததன் அடிப்படையில், 3 அரச நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (க-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மரண அறிவித்தல்



**தோற்றம்: 03.08.1937** **மறைவு: 15.07.2026**

### Dr. K.T சிவபாதம்

(Retd. DPDHS – பிரதி சுகாதாரப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கொழும்பு பம்பலபிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட DR. கனகசபை தாமோதரம்பிள்ளை சிவபாதம் (Retd,DPDHS) **15.07.2026** (புதன்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார், காலஞ்சென்ற திரு & திருமதி தாமோதரம்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற DR & திருமதி சிவஞானரட்னம் தம்பதியினரின் அன்பு மருமகனும், திருமதி முகுந்தினி அவர்களின் அன்புக் கணவரும், கணேசன், கனகசபை, காலஞ்சென்ற மல்லிகாதேவி, சீதாதேவி, சாவித்திரிதேவி ஆகியோரின் அன்பு சகோதரரும், அமுதினி, ஆரணி, அருணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜனார்த்தனன், நிலா ஆகியோரின் அன்பு மாமனாரும், குகன், ஜயனி, யாதவன், நிருசன், லத்திகா, ஏகன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் **17.07.2026** (வெள்ளிக்கிழமை) காலை **9.00** மணியளவில் **Borella Jeyaratne** மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் **3.00** மணியளவில் இறுதி கிரியைகள் நடைபெற்று **5.00** மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

**இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தொடர்புகளுக்கு: **Aarani - 0770464440**

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை : பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் : செல்வநாதன் பெண் மாங்களேஸ்வரி
ஆதனப்பதிவேட்டின் படி பெயர் : சொந்தக்காரர்
ஆதன இல – 12/9 வீதிஅகத்தனை வீதி வட்டாரம் - 03

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 03 அகத்தனை வீதியில் இவ் ஆதனம் அமைந்துள்ளது. இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு றெஜினா அன்ரனிப்பிள்ளை முகதாவில் 63/1977.11.25 திகதிய அறுதி உறுதி மூலம் வின்சென் றெஜினோல்ட் என்பருக்கு சொந்தமாக இருந்தது. இவ் ஆதனத்தில் மேற்குப் பக்கமாக அரைப்பங்கு 1986.11.07 ம் திகதி இவரது தந்தையாரால் நன்கொடையாக றெஜினோல்ட் செல்வநாதன் என்பவருக்கு வழங்கப்பட்டதென்றும் அவ் உறுதி தொலைந்து விட்டதென்று பிரசித்த நொத்தாரிசு சி.சிவபாலசுப்பிரமணியம் முகதாவில் 1667/05.07.2021 திகதிய நன்கொடை உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டு செல்வநாதன் பெண் மங்களேஸ்வரி என்பவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த ஆதனத்தை உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.சண்முகலிங்கம் அவர்களால் அளந்து வரைந்த 725ம் இலக்க 2026.07.06 ஆம் திகதிய நில அளவைப்படத்தில் நிலப்பரப்பு இரண்டு (2) குளி பூச்சியம் தசம் ஏழு நான்கு (0.74) ஆக காணப்படுகின்றது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை பண்டத்தரிப்பு கோவிற்பற்று சிறுவிளான் இறை "அக்கத்தானை" நிலப்பரப்பு 2 ஆகும்.

**இதன் எல்லைகள்**

கிழக்கு :- இம்மனுவேல் பெண் றோசலினின் ஆதனம்
வடக்கு :- பொதுப்பாதை நிலமும். ஒழுங்கை முகப்பும்
மேற்கு :- சூசைப்பிள்ளை நீமோந்துவின் உரிமைக்காரரின் ஆதனம்
தெற்கு :- மரியாம்பிள்ளை பெண் எலிசபேத்தின் ஆதனம்

இவ்வாதனத்தை செல்வநாதன் பெண் மங்களேஸ்வரி என்பவர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகத்தின் ஆதனப் பதிவேடுகளில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள். மேற்படி ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங் களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் செல்வநாதன் பெண் மாங்களேஸ்வரி என்பவர்களின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் ஏற்படக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.** (cs 61887) (N-1)

# நெடுந்தீவு ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு

## அமைச்சர் சந்திரசேகர் உறுதியளிப்பு!

யாழ்ப்பாணம், ஜுலை 17

நெடுந்தீவில் கடமையாற்றும் ஆசிரியர்கள் எதிர் கொண்டு வரும் தங்குமிட வசதிப் பற்றாக்குறை நெருக்கடி தொடர்பில் நிரந்தரத் தீர்வைக் காண்பதற்காக பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையிலான மத்திய கல்வி அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு சென்று விரைவில் தீர்வு பெற்றுத்தரப்படும் என அமைச்சர் சந்திரசேகர் உறுதியளித்துள்ளார். யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கல்வி அபிவிருத்தி உப குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து கடல்வழியாகப் பல மைல் தூரம் பயணித்து நெடுந்தீவுக்குச் சென்று சேவை செய்யும் வெளிமாவட்ட மற்றும் பிற பகுதி ஆசிரியர்கள் தங்குமிட வசதிகள் இன்றிப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர். முறையான தங்குமிடங்கள் இல்லாததால், அவர்கள் வாடகை வீடுகளிலும், தற்காலிக இடங்களிலும் தங்கிப் பணியாற்ற வேண்டிய அவலநிலை காணப்படுகிறது. இது அவர்களின் கற்பித்தல் திறனிலும், மனநிலையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

தங்குமிட வசதிகள் முறையாக ஏற்படுத்தப்படும் பட்சத்திலேயே, நெடுந்தீவுக்கு பாடரீதியான ஆசிரியர்களைத் தடையின்றி நியமிக்கமுடியும் என மாகாண கல்விப் பணிப்பாளர் வை. ஜெயச்சந்திரன் சுட்டிக் காட்டினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சந்திரசேகர், போக்குவரத்துச் சவால்களை மாவட்ட மட்டத்தில் தீர்ப்பதற்கான ஆரம்பக்கட்ட நிதிகளை ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான திட்டவரைபுகளைப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையிலான மத்திய கல்வி அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு சென்று விரைவில் தீர்வு பெற்றுத்தரப்படும் என உறுதியளித்தார். (ச–27)

## சபரீச ஐயப்பனில் ஆடிப்பிறப்பு பூசை

யாழ்ப்பாணம், ஜுலை 17

கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலயத்தில் ஆடிமாதப் பிறப்பு பூசை இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. சபரீச ஐயப்பனுக்கு அஷ்டாபிஷேகம், விசேட வசந்தமண்டபப் பூசை மற்றும் தீபாராதனை என்பன நடைபெறும். (ச–66)



பூநகரிப் பிரதேச செயலகத்தில் பதில் கடமை அடிப்படையில் உதவிப் பிரதேச செயலாளராக பணியாற்றி வந்த ச.குணஜா, நிரந்தர உதவிப் பிரதேச செயலாளராக தனது கடமைகளை கடந்த செவ்வாய்க்கிழமை பொறுப்பேற்றுக்கொண்டார். நிகழ்வில் பிரதேச செயலகத்தின் கணக்காளர் மற்றும் ஏனைய அலுவலர்கள் பங்கேற்றனர். (ச–27)

**மேசன், கூலியாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் மேசன், கூலியாட்கள் தேவை.

தொடர்பு: **077 6057 480** (cs61889) N

## பெயர் மாற்றம்

**வேலணை கிழக்கு, 2ம் வட்டாரத்தை சேர்ந்த நாகரெத்தினம் சண்முகலிங்கம் ஆகிய நான் எனது பெயரை நாகரெத்தினம் சண்முகநாதன் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் நாகரெத்தினம் சண்முகநாதன் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு தெரிவிக்கின்றேன்.**

CS/61891) J-1 **நாகரெத்தினம் சண்முகநாதன்**

## வேலைவாய்ப்பு

எமது காட்சியறைக்கு பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான ஆண்/ பெண் இருபாலாரும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

- விற்பனைப்பிரதிநிதி
- காசாளர்
- விற்பனையாளர்
- Accounting staff

தகமை- O/L கணித பாட சித்தியடைந்திருத்தல் பொருத்தமானவர்கள் 18.07.2026 (சனிக்கிழமை) நேரில் வருகை தரவும்

**Mega Ceramic Mall**
**No. 469, K.K.S Road, Jaffna**
**T.P: 021 221 3903**

CS/61895) J-1

## அடுத்த 3 நாள்களுக்கு ஈரானுக்கு கடும் அடி!

### அமெரிக்கா எச்சரிக்கை

கொழும்பு, ஜுலை 17

அடுத்த மூன்று நாள்களுக்கு ஈரானை அமெரிக்க இராணுவம் கடுமையாகத் தாக்கப்போவதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

உயர்மட்டக் குழுவினருடன் அவர் மேற்கொண்ட பேச்சுவார்த்தையை மேற்கோள் காட்டி அமெரிக்க ஊடகங்கள் இதனைத் தெரிவித்துள்ளன.

ஹோர்மூஸ் ஜலசந்தி கடல் வழிப் பாதையைக் கட்டுப்படுத்துவதில் அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல், தற்போது முழு அளவிலான போராக உருவெடுத்துள்ளது. இந்நிலையில் ஈரானின் ஒட்டுமொத்தப் பொருளாதார மற்றும் உட்கட்டமைப்புகளையும் முடக்கும் வகையில் அமெரிக்காவின் தாக்குதல் வியூகம் அமையப் போகிறது என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ச–இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வார இறுதி நாள்களில் பஸ் சேவை மட்டுப்பாடு

## வடமராட்சி கிழக்கு மக்கள் அவதி

யாழ்ப்பாணம், ஜூலை 17

**பருத்தித்துறையிலிருந்து வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு மற்றும் கோவில் வழியான ஊடாக இடம்பெறும் 762 வழித்தட பேருந்துச்சேவை வார இறுதி நாள்கள் மற்றும் பொது விடுமுறை நாள்களில் கடுமையாக மட்டுப்படுத்தப் படுவதனால் சிரமங்களை எதிர்கொள்வதாக அந்தப் பகுதிப் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**


ஏனைய நாள்களில் முறையான சேவையை வழங்கி வரும் இலங்கை போக்குவரத்துச் சபைக் குச் சொந்தமான அரச பேருந்து களும், இந்த விடுமுறை நாள் களில் தங்களின் சேவைகளை மிகக் குறைந்த அளவிலேயே இயக்குகின்றன.

மருதங்கேணிப் பிரதேசத்தில் உயர்தர மாணவர்களுக்கான தனி யார் கல்விநிலையங்கள் எவை யும் இல்லாத காரணத்தினால், அங்குள்ள மாணவர்கள் ஞாயிற் றுக்கிழமைகளில் மேலதிகக் கல்வி யைப் பெறுவதற்காக வடமராட்சி யின் நகர்ப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

பேருந்துகள் இல்லாததால் இவர் களின் கல்வி பெரிதும் பாதிக்கப் படுகிறது.

விடுமுறை நாள்களில் வடமராட்சி யின் பிரசித்திபெற்ற வல்லிபுர ஆழ் வார் ஆலயத்துக்கு வரும் பக்தர் களின் எண்ணிக்கை மற்றைய நாள்களை விட மிக அதிகமாகக் காணப்படும். இதன்போது பேருந்துச் சேவை ஒழுங்கீனத் தால் பக்தர்கள் பெரும் அசௌகரி யத்துக்குள்ளாகின்றனர்.

எனவே விடுமுறை மற்றும் வார இறுதிநாள்களில் பேருந்துச் சேவைகள் தடையின்றி இயங்கு வதை உறுதிசெய்ய உரிய அதிகாரி கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-80)



# ‘எல்—நினோ’ தாக்கத்தின் சவால் மன்னாரில் விவசாயத் திட்டமிடல்!

மன்னார், ஜூலை 17

எல்-நினோ காலநிலைத் தாக்கத்தால் விவசாயத் துறைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் கட்டுப்படுத்தி, அதற்குச் சவால் விடுத்து புதிய பயிர்ச்செய்கைத் திட்ட மிடல்களை மேற்கொள்ள முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மன்னார் மாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமை யில் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது உலகளாவிய ரீதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வரும் எல்-நினோ காலநிலைத் தாக்கமானது நடப்பு 2026ஆம் ஆண்டு முதல் வரும் 2027ஆம் ஆண்டு வரை தொடரும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இதனால் ஏற்படக்கூடிய வறட்சி மற்றும் காலநிலை மாற் றங்களை எதிர்கொள்ளத் தேசியமட்டத்திலும் ஏனைய மாகாணங்களிலும் முன்னாயத்த நடவடிக்கைகள் ஏற் கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தின் பொதுவான திட்டங்களுக்கு அப் பால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உள்ள நிலப்பயன்பாடு மற்றும் நிலச்சூழ்நிலைகள் வெவ்வேறானவை.

மன்னார் மாவட்டத்தின் தனித்துவமான நிலச் சூழ் நிலைக்கு ஏற்றவகையில், உள்ளூர் விவசாயத் திட்ட மிடலை மேற்கொள்ளப்படுவது அவசியம் என்று மாவட் டச் செயலர் தெளிவுபடுத்தினார். அத்துடன் எல்-நினோ காலநிலைக்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய மாற்றுப் பயிர் களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் நீர் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்குப் போதிய விழிப்புணர்வும், அறிவுறுத்தல்களும் வழங்கப்படவுள்ளன. கூட்டத்தில், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சண்முக ராஜா சிவசிறி, மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.சசிகலா பானு, மேலதிக அரசாங்க அதிபர் எம். பிரதீப், விவசாயத் திணைக்கள உயர்மட்ட அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் விவசாய அமைப்பு களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். (ச-56)

# சிறுவர்களின் பிரச்சினைகள்; அதிகாரிகள் கலந்துரையாடல்

கிளிநொச்சி,ஜூலை 17

சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் எதிர் காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அதிகாரிகள் ஒன்றுகூடி ஆராய்ந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழுக் கூட்டம், மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது பாடசாலை மாணவர்களின் இடைவிலகல் மற்றும் மீளிணைப்பு, பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெற்றுக் கொடுத்தல், கிராமிய சிறுவர் அபிவிருத்திக்குழு, பிரதேச மட்ட சிறுவர், பெண்கள் முறைப்பாடுகள், பிரதேசமட்டத்தில் தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகள், அரச சார்பற்ற நிறு வனங்களின் செயற்பாடுகள் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. கலந்துரையாடலில் மாவட்டச் செயலகத்தி னர், கல்வித் திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலகங் களில் கடமையாற்றும் சிறுவர், பெண்கள் பிரிவுகளின் உத்தியோகத்தர்கள், உளவள ஆற்றுப்படுத்துநர்கள், நன் னடத்தை உத்தியோகத்தர்கள் மற்றும் துறைசார்ந்து பணி யாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (க-113)



# 2500 கிலோ வீதம் முல்லைத்தீவில் நெல் கொள்வனவு

முல்லைத்தீவு,ஜூலை 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு விவசாயிடம் இருந்து 2500 கிலோகிராம் வீதம், நிர்ணய விலையில் நெல் கொள்வனவு செய்யப்படு கின்றது. அதற்கமைவாக சிவப்பு நாடு 120 ரூபாவுக்கும், வெள்ளை நாடு 120 ரூபா வுக்கும், சம்பா 130 ரூபாவுக்கும், கீரிச்சம்பா 140 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படு கின்றது. முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் நெல் களஞ்சியசாலையிலும், முற்றிப்பு நெல் களஞ்சியசாலையிலும் நெல் கொள்வனவு முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக மாவட்டத்தில் 2 ஆயிரத்து 800 மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது .(க-55)



# காளான் வளர்ப்புக்கு காப்புறுதித் திட்டம்!

கொழும்பு,ஜூலை 17

காளான் வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்கு விக்க புதிய காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச் சின் கீழ் இயங்கும் விவசாய மற்றும் விவசாய காப்புறுதிச் சபை இந்தப் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

250 காளான் வளர்ப்புப் பைகளைக் கொண்ட காளான் கூடம் ஒன்றினை, மூன்று மாத காலப் பகுதிக்குக் காப்பு றுதி செய்வதற்கான தவணைக்கட்டணம் சுமார் 2,025 ரூபாவாகும். அத்துடன், நோய்கள் அல்லது பூச்சித் தாக் கங்கள் காரணமாக காளான் வளர்ப்புக்குச் சேதம் ஏற்பட் டால், 22,500 ரூபா காப்புறுதி இழப்பீட்டை வழங்கு வதற்கும் இந்தத் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. (ச-இ)

# வவுனியாவில் வேகமாகப் பரவும் டெங்கு; விழிப்புணர்வுத் திட்டங்களுக்கு ஏற்பாடு

வவுனியா,ஜூலை 17

வவுனியா மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துவரும் நிலை யில், டெங்கு ஒழிப்புக்கான குறுகிய மற்றும் நீண்ட காலத் திட்டங்கள் தொடர்பான விசேட கலந்துரை யாடல், வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

முறையற்ற கழிவகற்றல், நீர் தேங்கிக் காணப்படல் மற்றும் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு ஏற்ற வாழ்விடங்கள் நகரத்தில் காணப்படுகின்றமை போன்ற காரணங்களால் மாவட்டத்தில் டெங்கு அபாயம் அதிகரித்துள்ளது என்று அதிகாரிகள் சுட் டிக்காட்டினர். அதற்கமைவாக அரச நிறுவனங்கள், பாடசாலைகள், மதஸ்தலங்கள் மற்றும் பொது இடங்களை உள்ளடக்கும் வகையில் பல்வேறு டெங்கு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு வேலைத்திட் டங்களை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட் டுள்ளது. வவுனியா தெற்கு, வெண்கலசெட்டிகுளம் மற்றும் வவுனியா ஆகிய பிரதேச செயலர் பிரிவு களில் டெங்கு நோய்ப் பரவல் அதிகரித்துள்ளது என்றும் சுகாதாரப் பிரிவினர் சுட்டிக்காட்டினர்.

கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமர சிங்க தலைமையில் நடைபெற்ற கலந்துரையாட லில், வவுனியா மாவட்டச்செயலர் பி.ஏ.சரத்சந்திர, மேலதிக மாவட்டச் செயலர் நா.கமலதாசன் ஆகியோர் உட்பட முப்படை அதிகாரிகள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (க-110)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவர்களை இலக்கு வைக்கும் போதைப்பொருள் ஒழிக்கப்படும்!

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 17**

**எதிர்காலத் தலைமுறையை அழிக்கும் - பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து தற்காலத்தில் பரப்பப்பட்டு வரும் போதைப் பொருள் நடமாட்டத்துக்கு அரசாங்கம் விரைவில் முற்றுப்புள்ளியிடும் என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி ஐயனார்புரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 31 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதியை திறந்துவைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டின் கல்வித் துறைக்கு அத்தியாவசிய முன்னுரிமை அளித்து வருகின்றது. அமைச்சர், அடுத்த நிதியாண்டில் கல்வித்துறைக்காகமுன்னெப்போதையும் விட அதிகளவிலான நிதியொதுக்கீடுகள் செய்யப்படவுள்ளன. அதன் மூலம் ஆசிரியர்களுக்கான சம்பள உயர்வுகள் முறையாக வழங்கப்படவுள்ளன. முன்னைய அரசாங்கங்களின் காலத்தில் அரச ஊழியர்களும், ஆசிரியர்களும் தங்களது நியாயமான சம்பள உயர்வைக் கோரி வீதிகளில் இறங்கிப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலை காணப்பட்டது. ஆனால், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், ஊழியர்களின் தேவைகளை உணர்ந்து எவ்வித போராட்டங்களும் இன்றிச் சம்பள உயர்வுகளை வழங்கியுள்ளது- என்றார். (ச-55)



சிறிய பாலங்களை அமைக்கும் செயற்றிட்டத்தின்கீழ், சாவகச்சேரி கல்வயல் நுணாவில் வீதியிலுள்ள பாலத்தின் புனரமைப்புக்கான அடிக்கல், நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரனால் அண்மையில் நாட்டப்பட்டது. (சு-25)

# 136ஆவது தொல்லியல் தின நினைவூட்டல் நிகழ்வு

மன்னார், ஜூலை 17

மன்னார் மாவட்டத்திலுள்ள தொல்லியல் இடங்களைப் பாதுகாக்கும் வேலைத்திட்டம் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மன்னார் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. 'மரபுரிமைக்கு ஓர் உயிரோட்டம்' எனும் தொனிப்பொருளில் குறித்த நிகழ்வு நடைபெற்றது. இதன்போது 136ஆவது தேசிய தொல்லியல் தினம் தொடர்பான நினைவூட்டல்கள் இடம்பெற்றதோடு மன்னார் மாவட்டத்திலுள்ள தொல்லியல் இடங்களைப் பாதுகாப்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

வவுனியா பிராந்திய தொல்பொருள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் செனரத் விக்கிரமசிங்க, பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலக அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், வவுனியா பிராந்திய தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (41-56)




## மரண அறிவித்தல்



தோற்றம் 14.12.1948

மறைவு 16.07.2026

**செல்வி செல்லத்துரை செல்வராணி**

புளியங்கூடலை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி. செல்லத்துரை செல்வராணி அவர்கள் நேற்று (16.07.2026) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார், செல்லத்துரை - அன்னம்மா ஆகியோரின் மகளும், புவனேஸ்வரி, அமரர் சிவானந்தசோதி ஆகியோரின் சகோதரியும், அமரர் கனகசபாபதியின் மைத்துனியும், கெங்காதரன், யமுனாதரன், முரளிதரன் (லண்டன்), சசிதரன் (பிரான்ஸ்), சசிகலா, அமரர் ஸ்ரீதரன், கிரிதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் சிறிய தாயும், பரமேஸ்வரி (மல்லிகா), சுலோசனா (பாசையூர் புனித அந்தோனியார் பாடசாலை ஆசிரியர்), தக்ஷா (லண்டன்), மேரி எமிலியா (பிரான்ஸ்), நிருபாநந் . தட்சாயினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், மதுஷா, தனுஷன், மேனகன், வாணன், கனுஷிகா (லண்டன்), தனுஷன் (லண்டன்), லக்ஷ்மி (லண்டன்), பிரகாஷ் (பிரான்ஸ்), பிரின்சனா (பிரான்ஸ்), பிரிந்தா (பிரான்ஸ்), நிதர்ஷன், சுதர்ஷன், நிரோஷா, பிரணகா (பிரான்ஸ்), ஹர்னிகா (பிரான்ஸ்), அகரன் (பிரான்ஸ்), எஸ்டல் (பிரான்ஸ்), சுதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேத்தியும், ஆதிரனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் (இல. 70/24, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 17.07.2026 வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 2.00 மணியளவில் கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
0777 209 686
0777 726 874


# உதைபந்தாட்ட லீக் சுற்றுக்கு குருநகர் பாடும்மீன் தகுதி

யாழ்ப்பாணம்,ஜூலை 17

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் மற்றும் வடமராட்சி உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 நபர் கொண்ட வடமாகாண ரீதியிலான றேஞ்சஸ் வெற்றிக்கிண்ணம் உதைபந்தாட்டத் தொடரின் மூன்றாம் சுற்று ஆட்டத்தில், குருநகர் பாடும்மீன் அணி வெற்றி பெற்று லீக் சுற்றுக்கு பத்தாவது அணியாகத் தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து கீரிமலை சிவானந்தா அணி மோதியது. ஆட்டநேர முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் குருநகர் பாடும்மீன் அணி வெற்றி பெற்று லீக் சுற்றுக்கு பத்தாவது அணியாக தகுதி பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக குருநகர் பாடும்மீன் அணியின் முன்கள வீரன் விசோத் தெரிவு செய்யப்பட்டார்.

இ (கு)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## 7 என்புத்...

செம்மணிப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 34ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. இதன்போதே, ஒரு சிசுவின் என்புத் தொகுதி உட்பட 7 என்புத்தொகுதிகள் நேற்று மீட்கப்பட்டன. அத்துடன், 6 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன் பாசிமணி ஒன்றும் சான்றுப் பொருளாகக் கைப்பற்றப்பட்டுள்ளது. இதன்படி, செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை 420 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் 416 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோமதேவா தலைமையிலான குழுவினர், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், சட்டத்தரணிகள், துறைசார் நிபுணர்கள் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணிகளான நிறஞ்சன், பூரணி மரியநாயகம் ஆகியோர் அகழ்வுப் பணிகளில் முன்னிலையாகி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் கல்வியியல் துறையும் உயர்பட்டப்படிப்புக்கள் பீடமும் இணைந்த நடத்துகின்ற கல்வியியலில் மூன்றாவது சர்வதேச ஆய்வுமாநாடு நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் திறவுகோல் உரையினை ஆற்றவுள்ள தஞ்சாவூர் பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் கல்வியியல் துறைத் தலைவர் பேராசிரியர் ஜி.தமிழ்வாணன் தமிழகத்திலிருந்து வருகைதந்தார். கடல்வழி வருகை தந்த அவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறையினர் காங்கேசன்துறை துறைமுகத்தில் வரவேற்று மதிப்பளித்தனர். (ம-26)

## மகளை...

யுள்ளது. கடந்த 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனது சொந்த மகளை தொடர்ச்சியாக பல தடவைகள் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கினார் என்ற குற்றச்சாட்டு அந்த நபருக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான வழக்கு விசாரணை நிறைவடைந்த நிலையில், குறித்த நபரின் குற்றங்கள் ஆதாரபூர்வமாக நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டன. இதையடுத்து வழக்கு நேற்று தீர்ப்புக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே, அவருக்கு 45 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார். (அ-ம-26-110)

## எமது...

எமது சிந்தனைகளுக்கு இடமளிக்கப்பட்டது. அதற்கமைய நாம் செயற்பட்டோம். முன்னோக்கிச் சென்றோம். எமது காலத்தில் எமது சிந்தனை தொடர்பில் பெற்றோருக்கு புரிதல் இருக்கவில்லை. இன்று காலம் மாறிவிட்டது. இளைய தலைமுறையின் சிந்தனைபற்றி இளைய தலைமுறைக்குதான் தெரியும். எனவே, தலைமையேற்க இளைஞர்கள் முன்வர வேண்டும். அதற்கான ஆலோசனை, வழிகாட்டலைத்தான் எம்மால் வழங்கமுடியும். ஏனெனில் எமது காலம் முடிந்துவிட்டது - என்றார். (அ-ம)

## சங்கும்...

பொதுவான பிரச்சினைகள் தொடர்பில் தமிழரசுக் கட்சியும், ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியும் இணைந்து செயற்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாகவே இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. (அ-ம-66)

## நம்பிக்கையில்லாத்...

வகித்தாலும் சுயாதீனமான முடிவெடுக்கும் சுதந்திரம் எமக்கு உள்ளது. அந்த வகையில் நீதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் நாம் இன்னமும் கையொப்பம் இடவில்லை. குறித்த பிரேரணை தொடர்பில் நாம் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை. ஆனால், நீர்கொழும்பு சிறைக்கலவரம் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் - என்றார். (அ-ம-இ)

## சிறுமி...

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த குறித்த சிறுமியின் வீட்டார் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமையவே அந்த இளைஞர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சிறுமியை உரிய மருத்துவப் பரிசோதனைக்குப் பின்னர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்குமாறும் நீதிமன்றம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. (அ-ம-26)

## அதிகாரிகளின்...

தும் கடமையாகும் என்று அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார்.

கிளிநொச்சி அபிவிருத்திக் கூட்டம் கைவிடப்பட்டமை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும், மாவட்டத்தின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவும் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தை சிலரின் பொறுப்பற்ற மற்றும் நாகரிகமற்ற நடத்தையால் இடைநிறுத்தப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வாழ்வாதாரம், உட்கட்டமைப்பு, விவசாயம், மீன்பிடி, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அத்தியாவசிய அபிவிருத்தி விடயங்கள் விவாதிக்கப்படும் உயர்மட்ட நிர்வாக மேடைகள் தனிப்பட்ட அரசியல் நாடகங்களுக்கான அரங்குகளாக மாற்றப்படக் கூடாது. கூட்டங்களில் கலந்துகொள்வது என்பது வெறுமனே சத்தமிடுவதோ, குழப்பம் விளைவிப்பதோ அல்ல. ஜனநாயக மரபுகளையும், நிர்வாக நடைமுறைகளையும், அதிகாரிகளின் கௌரவத்தையும் மதித்துச் செயல்பட வேண்டிய பொறுப்புணர்வு அனைவருக்கும் உள்ளது. அதற்கான அரசியல் நாகரிகத்தையும், நிர்வாகப் பண்பாட்டையும் சிலர் இன்னும் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

தொடர்ச்சியாக அதிகாரிகள் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து அபிவிருத்திப் பணிகளை திசைதிருப்பும் முயற்சிகள் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அரசியல் இலாபத்திற்காக மக்களின் எதிர்காலத்தோடு விளையாட அனுமதிக்க முடியாது. இன்று நடைபெற்ற சம்பவம் இத்தகைய பொறுப்பற்ற நடவடிக்கைகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை அவசியம் என்பதை மீண்டுமொருமுறை உறுதிப்படுத்தியுள்ளது - என்றார். (அ-ம-66-80)

## கிளிநொச்சிக்...

விருத்திக்குழுக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கல்வி, சுகாதாரம், வீதி அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போது கிளிநொச்சி திருவையாறு பகுதியில் விவசாயச்செய்கை தேசிய வேலைத்திட்டத்தில் முறைகேடு இடம்பெற்றதாக நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா குற்றஞ்சாட்டினார். கிளிநொச்சி மாவட்டச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகளை ஊழல்வாதிகள் என்றும் அவர் கடுமையாக விமர்சித்தார். இதற்கு அதிகாரிகளும் பதில் கருத்துக்களைத் தெரிவித்த நிலையில் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

அத்துடன், ஆதாரங்கள் இல்லாமலும் தேவையற்ற ரீதியிலும் அதிகாரிகளைப் பார்த்து அவதூறுகளைக் கூறவேண்டாம் என நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு மிக நெருக்கமாகச் சென்று அமைச்சர் சந்திரசேகர் வாக்குவாதம் செய்தார். இதனால் சபையில் மேலும் பரபரப்பான நிலை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் வெளிநடப்புச் செய்தனர். அதிகாரிகள் இல்லாத காரணத்தால் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், கருணநாதன் இளங்குமரன், பிரதேசசபைகளின் தவிசாளர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் இந்த அபிவிருத்திக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். (அ-ம-26-35-55-80)

## மாகாணத்...

காரியவசம் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாணசபைத் தேர்தல் அல்லது ஏதேனுமொரு தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்குச் சவால் விடுக்கின்றோம். மக்களின் ஆதரவு இல்லாத காரணத்தாலேயே தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் அச்சப்படுகின்றது. தேர்தலை நடத்தினால் நிச்சயம் மக்கள் உரிய பதிலை வழங்குவார்கள். அரசாங்கத்தின் பலவீனங்களைச் சுட்டிக்காட்டும் நிலையில் பிரதான எதிர்க்கட்சி இல்லை - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# அரசமைப்புடன் விளையாடுவது ஜனநாயகத்தைச் சீர்குலைக்கும்!

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

**கொழும்பு,ஜூலை 17**

**மக்கள் வேண்டாம் என்று எதிர்க்கும் ஒரு விடயத்தை அரசாங்கம் தன் அதிகாரப் பலத்தால் செய்ய முற்படுவது, அவர்கள் ஜனநாயகப் பண்புகளை மதிக்கவில்லை என்பதையே காட்டுகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். உயர்நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை நீடிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுவரும் முயற்சிகள் குறித்துக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது நீதிபதிகள் மட்டுமன்றி, ஆசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் அடிமட்டத் தொழிலாளர்கள் உட்பட அனைத்துத் துறையினரினதும் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பது தொடர்பாக ஒரு பொதுவான கொள்கை ரீதியிலான விவாதம் அவசியமாக இருக்கிறது.


அதைவிடுத்து, திடீரென ஒரு சட்ட மூலத்தைக் கொண்டுவந்து உயர் நீதிமன்றங்களில் இருக்கும் குறிப்பிட்ட சில நீதிபதிகள் மற்றும் நீதியரசர்களின் ஓய்வுபெறும் காலத்தை மாத்திரம் நீடிப்பதற்கு முற்படுவதானது முற்றிலும் ஜனநாயகத்துக்கு முரணானது. அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்வது என்பது வெறும் 8 அல்லது 16 நபர்களின் பதவிக்காலத்தை நீடிப்பதற்காக மட்டுமாக இருக்குமாயின், அது ஒருஅப்பட்டமானஅரசியல்தேவையை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கையாகும். இத்தகைய போக்கு நாட்டின் மிக உயரிய அரசியலமைப்புச் சட்டத்தை அரசியல் மயமாக்கிவிடும் - என்றார். (ச-இ)

## சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

வரலாற்றுச் சிறப்பு மிக்க மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய ஆடி மாதச் சதுர்த்தி உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெறவுள்ளது.

இன்று மாலை 4 மணியளவில் அபிஷேக வழிபாடுகள் ஆரம்பமாகும். மாலை 5 மணியளவில் பூசை வழிபாடு, மாலை 5.30 மணியளவில் வசந்தமண்டபப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் வீதி உலா வரும் திருக்காட்சி இடம் பெறும். (ம-66)



## இத்திமடு நாகதம்பிரான் ஆலயத்துக்கு அடிக்கல்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பெரிய இத்திமடு நாகதம்பிரான் ஆலயப் புனரமைப்புக்கு நேற்று முன்தினம் அடிக்கல் நடப்பட்டது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் களான துரை ராசா ரவிகரன், செ.திலகநாதன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் நிசாந்தன், புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (க-246)

## நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கவேண்டும் அரசாங்கம்

கொழும்பு, ஜூலை 17

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு அரசாங்கம் எவ்வித தாமதமும் இன்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். என தினன தகுண வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு அரசாங்கம் எவ்வித தயக்கமும் காட்டக்கூடாது. தங்களது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இந்த அமைப்பு ரீதியான மாற்றத்தைப் பிற்போடுவது மக்களின் ஜனநாயக எதிர்பார்ப்புகளை புறந்தள்ளும் செயலாக அமைந்துவிடும் - என்றுள்ளது. (ம)

## வண்ணை காமாட்சியில் சுக்கிரவார விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 17

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் சுக்கிரவார விழா இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதன்போது அம்பாள் தங்கரதத்தில் உள் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருட் காட்சியளிப்பார். (ச)

# தமிழ்க் கட்சிகளின் இணைவை திசைகாட்டி அரசு வரவேற்கும்!

## அமைச்சர் லாந்காந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

தமிழ் முஸ்லிம் அரசியல் கட்சிகள் பொது இணக்கப்பாட்டுடன் ஒன்றிணைந்துள்ளமை சிறந்த விடயம். இதை நாங்கள் வரவேற்கின்றோம் என்று அமைச்சர் லால்காந்த தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு எமது அரசாங்கம் மிகச் சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றது. விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்கியுள்ளோம். மானிய விலைக்கே உரம் தற்போது விவசாயிகளுக்கு விநியோகிக்கப் படுகிறது. ஒவ்வொரு வாரமும் ஏதாவதொரு விடயத்தை எதிர்க்கட்சித் தலைவர் கையில் எடுக்கிறார். ஒருசில பிரச்சினைகளின் பின்னணியில் அரசியல் காரணிகள் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

விவசாயிகளின் உரிமை பற்றி தற்போது பேசும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ரணில் மைத்திரி அரசாங்கத்தின் காலத்தில் எவ்வாறு செயற்பட்டார். விவசாயிகளுக்கு எவ்வாறு வீடுகளை நிர்மாணித்து கொடுத்தார் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

எதிர்க்கட்சித் தலைவருடன் ஒன்றிணைவதால் இனி எவ்வித பயனுமில்லை என்பதை முன்கூட்டியதாக உணர்ந்தே நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் முஸ்லிம் அரசியல் கட்சிகள் பொது இணக்கப்பாட்டுடன் ஒன்றிணைந்துள்ளன. இது சிறந்ததே. தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் ஒன்றிணைவு வரவேற்கத்தக்கது.

எதிர்க்கட்சித் தலைவருக்கு இனி அரசியல் இல்லை, அவருடன் ஒன்றிணைந்திருந்தால் தம்மை தெரிவுசெய்த மக்களுக்கு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியாது என்பதை தமிழ் மற்றும் முஸ்லிம் பிரமுகர்கள் விளங்கியுள்ளனர் - என்றார். (ம)




**காணி விற்பனைக்கு**

உடுவில் மகளிர் கல்லூரியில் இருந்து 50m தூரத்தில் 1 1/2 பரப்பு, 2பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 076 772 5781, 075 068 4622

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 16.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org